10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 02 அதிர்வு 19 சனிக்கிழமை 19 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18





# கண்ணீரில் கரைந்தது முள்ளிவாய்க்கால்

முள்ளிவாய்க்கால், மே 19

தமிழின அழிப்பு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முள்ளிவாய்க்கால் மண்ணில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வாகனப் பேரணியாகவும் வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களிலிருந்து விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட பஸ்களின் மூலமும் முள்ளிவாய்க்காலில் ஒன்று கூடினர். 06▶

## வடக்கில் கடையடைப்பு



யாழ்ப்பாணம், மே 19

முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் நினைவு தினமாகிய நேற்று வடக்கில் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள அனைத்து வர்த்தகர்களும் வர்த்தக நிலையங்களை அரைநேரம் மூடி தமது துக்கத்தை அனுஷ்டித்தனர். வீதியில் சன நடமாட்டம் குறைவாகவும், சில 06▶

## மூவருக்கு மரணதண்டனை

கொழும்பு, மே 19

2001 ஆண்டு நவம்பர் 5 ஆம் திகதி நவகம்புர பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் 3 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்பளித்துள்ளது.

மதுபானம் அருந்திக்கொண்டிருந்த நிலையில் ஏற்பட்ட 06▶

## முன்னாள் போராளியை சுட்டு பிடிக்க முயற்சி மன்னாரில் பரபரப்பு

மன்னார், மே 19

மன்னார் உயிலங்குளம் புதுக்குடியிருப்பு கிராமத்தில் நேற்று முன்னதினம் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் வெள்ளை நிற காரில் சிவில் உடையில் சென்றவர்கள் முன்னாள் போராளி ஒருவரைகடத்திச்செல்லமுற்பட்டுள்ளதோடு, துப்பாக்கிச் சூட்டினையும் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றவர்கள் கொழும்பில் இருந்து வருகை தந்த அரச புலனாய்வுத்துறையினர் என 06▶

## கொழும்பில் புலிக்கொடிக்கு தீ



கொழும்பு, மே 19

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை வடக்கு மக்கள் நினைவுகூர்ந்த அதே வேளை தெற்கில் சில இளைஞர்கள் விஷமத்தனமான செயற்பாட்டில் நேற்றையதினம் ஈடுபட்டனர். 06▶

## தமிழர்களுக்கு தீர்வைப்பெற சர்வதேச அழுத்தம் அவசியம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன்



முள்ளிவாய்க்கால், மே19

என்றோ ஒரு நாள் சர்வதேச சமூகம் தனது மனசாட்சிக் கண்களைத் திறக்கும், இந்த இனப்படுகொலைக்கு நீதி வழங்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்த மண்ணில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பொறுமையுடன் காத்து நிற்கின்றனர். எனவே இலங்கை அரசுக்கு சர்வதேசம் அழுத்தங்களை வழங்கவேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் முள்ளிவாய்க்காலில் நடந்த தமிழின அழிப்பு நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய அவர், 06▶

## புலனாய்வாளர்கள் கண்காணிப்பு

முள்ளிவாய்க்கால், மே 19

முள்ளிவாய்க்கால் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானதில் இருந்து முடிவடைந்து செல்லும் வரை தொடர்ச்சியாக புலனாய்வாளர்களது கண்காணிப்பு காணப்பட்டிருந்தது. அஞ்சலியில் ஈடுபட்ட பொது மக்கள் அரசியல்வாதிகள் என அனைவரையுமே புலனாய்வாளர்கள் கண்காணித்திருந்தனர்.

குறிப்பாக வழமையாக அப் பகுதியில் கடமையில் ஈடுபடும் புலனாய்வாளர்களை தவிர்த்து வேறு பகுதிகளில் உள்ள புலனாய்வாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 06▶

## யாழ். பல்கலையிலும் அஞ்சலி




யாழ்ப்பாணம், மே 19

யாழ். பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

பல்கலைக்கழகத்தின் மத்தியில் உள்ள அலங்கார சுற்று வட்டத்தில் சுடரேற்றி, நிகழ்வுகள் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் நினைவுச்சுடரை ஏற்றி வைத்தர்.

தொடர்ந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் உட்பட பலர் மெழுகுவர்த்திகளை ஏந்தியவாறு, நினைவேந்தல் கீதம் இசைக்க அஞ்சலி செய்தனர். தொடர்ந்து மலர் அஞ்சலி செய்ததோடு, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின்முள்ளிவாய்க்கால்பிரகடனம்வெளியிட்டு வைக்கப்பட்டது.

## முகாமைத்துவ உதவியாளர் பரந்தன்–பூநகரி விபத்தில் பலி



யாழ்ப்பாணம், மே 19

பரந்தன் - பூநகரிக்கு இடையில் வடக்கு மாகாண திணைக்களத்தின் பிக் கப் வாகனம் விபத்துக்குள்ளாகியதில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் உயிரிழந்தார்.


இந்த விபத்து நேற்று முற்பகல் 11.35 மணியளவில் இடம்பெற்றது.

கல்வித் திணைக்களத்தின் பிக்கப் வாகனத்தின் சில்லு ஒன்று காற்றுப் போனதால் கட்டுப்பாட்டையிழந்து தடம்புரண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். 06▶

# தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெற்ற, முள்ளிவாய்க்கால் படுகொலையின் 9 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள்




முள்ளிவாய்க்காலில் அஞ்சலி





யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் முள்ளிவாய்க்கால் நோக்கிய பேரணி



மன்னாரில் அஞ்சலி




பொது அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் அஞ்சலி



கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அஞ்சலி



மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் நினைவேந்தல்



பொது அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் அஞ்சலி




எதிரொலி
Ethiroli
சனி, 19 மே 2018 ethirolimedia@gmail.com

## ஆறாவடு அப்படியே இருக்கட்டும்!

போரின் கோரமுகத்தின் முன்றலில் தம்மைக் காக்க யாரும் வந்திராத, தப்பிக்க ஏதும் இயலாத காரணத்தினாலும் இனப்பற்றாலும் எமக்காக தம்முயிரையும், வாழ்வையும், தொலைத்த அத்தனை உறவுகளுக்கும் கண்ணீர்க்கடலான அஞ்சலிப்புகள் முள்ளிவாய்க்காலில் நேற்று நிகழ்ந்தன.

காட்டிக்கொடுத்தவன், துரோகியானவன் குடும்பம் கூட ஏதோவொருவகையில் இனப்பிரச்சனையினால் பாதிக்கப்பட்டே இருந்திருக்கும். ஆனால் அவன் இவனென்று பாகுபாடு பார்க்காமல் அவர்களுக்காகவும் தம்மினத்துகாகவும் தான் இவர்கள் வலிகளையும் வேதனைகளையும் சுமந்து மரணித்து அடையாளமாகினர். அதை மனதில் கொண்டோ என்னவோ, பேதம் பார்க்காமல் உயிர் துறந்த அத்தனை பேருக்கும் பொதுமையான நினைவேந்தல், உணர்வுபூர்வமாக நடந்தேறியது. ஆனாலும் சின்னச் சின்ன இடறல்கள் இருக்கத்தான் செய்தன. ஒன்றுபட்டு அஞ்சலிப்போம் என்றுவிட்டு, நிகழ்வுக்கு வந்த அரசியல்வாதிகளை, 'நேர்சரிப் பிள்ளைகள்' போல இருத்தி, எழுப்பியமை சரியாகாது. எல்லோரையும் போலவே அவர்களும் அஞ்சலிக்க வந்தவர்கள் என்பதால் அவர்களை அவரவர் பாட்டிலேயே இயங்க விட்டிருக்கலாம். அதை விடுத்து கடிவாளம் போடுதல் என்பது அவர்களை அவமானப்படுத்துவது போலாகிவிடும். அடுத்த முறை இந்த நினைவேந்தலை அவர்கள் புறக்கணிக்கும் நிலையும் உண்டாகிவிடும். இது முதலில் சொன்ன 'ஒன்றுபட்டு அஞ்சலித்தல்' என்ற அடிப்படைப் பண்பையே ஆட்டங்காண வைத்துவிடும்.

அகவணக்கம் செலுத்தும் போது, ஒலிபெருக்கிகள் காதைக் கிழித்து தொங்கப்போடுவது போல, வர்ணனையைத் தொடர்ந்தமையை நினைவேந்தலுக்கு வந்த எவருமே சகித்துக்கொள்ளவில்லை. நிகழ்வை ஏற்பாடு செய்வதிலுள்ள முதிராத்தன்மை அப்பட்டமாகத் தெரிந்தது.

இதையெல்லாம் தாண்டி தாமாக நிகழ்வில் சில விடயங்கள் 'அட' போடவும், நெஞ்சுருகவும் வைத்தன. வந்திருந்த அத்தனை பேருக்கும் அன்னமளித்த 'அக்கினிச்சிறகுகள்'அமைப்பும், நினைவேந்தல் முடிந்தபின்னர் எல்லோரும் கிளம்பிவிட, அங்கு நிறைந்து கிடந்த பொலித்தீன்களை தாமாகவே அகற்றிய மகளிர் குழு ஒன்றும் ஆச்சரியப்படவைத்தன.

நினைவேந்தலின் பின்னர் ஒரு குடும்பம் நினைவுத்தூபிக்கு வந்தது. கற்பூர ஆராதனையின் பின்னர் வடை, கடலை, பொங்கல் என்பவற்றைப் படையலிட்டனர். அழுது முடிய அங்கிருந்தவர்களுக்கு அதைப் 'பிரசாதமாக' வழங்கி, முள்ளிவாய்க்கால் தூபியை ஒரு கோயிலாக மாற்றி, நெகிழ வைத்தனர்.

நமக்காக உயிர்த்தியாகம் செய்தோரைக் கோயில் கட்டிக் கும்பிடுவதில் தவறில்லையே.

இன்னும் நாம் அவர்களுக்காக நிறைய விடயங்களைச் செய்யவேண்டியும் இருக்கிறது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பார்த்துக்கொள்ளுதலும், போரின் வடுக்களை வரலாறுகளை அடுத்த சந்ததியினருக்கு கொண்டுசெல்லுதலும், புலிகளினதும் அந்த மக்களினதும் பெயரைச் சொல்லி எவ்வித அரசியல் ஆதாயத்தை தேடாமலிருத்தலும்தான்.

அவர்கள் அத்தனை தமிழ் மக்களுக்கும் உரித்தானவர்கள். அவர்களை தமிழ் மக்களிடமிருந்து எங்கள் அரசியல் சுயலாபங்களுக்காக பிரித்து ஒதுக்கி இறுதியில் ஒன்றுமில்லாதாக்குவதை விட, அவர்கள் குருதியில் ஏறிநின்று எம் அரசியல் செய்வதை தவிர்த்து, எம்மால் இயன்றளவுக்கு அவர்களுக்கு ஆதரவாகவும் நன்றிக்கடனுடையவர்களாகவும் இருத்தலே இக்காலத்தில் உத்தமம். முடிந்தால் அவர்களின் பெயரில் ஒன்றுபடுங்கள் இல்லையேல் அவர்களின் பெயர்களை தொட்டு ஊறுகாயாக்குவதை கைவிடுங்கள்.

மே பதினெட்டு நீங்காத வடு என்றும் ஆறாது இருக்கட்டும். இருப்பதையாவது அழியாமல் பார்த்துக்கொள்வோம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தமிழரின் தியாகங்கள் வீண்போகாது



கொழும்பு,மே 19

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் செய்த அளப்பெரிய தியாகங்கள் வீண்போகாது என கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்றையதினம் தமிழர்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் தியாகங்களுக்கான பிரதிபலன் வரப்போகின்ற சந்ததிகளுக்கு கிடைப்பதை உறுதிசெய்வதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றைய (நேற்றைய) தினத்தை எம்மக்களோடு இணைந்து துக்க தினமாக அனுஷ்டிக்கின்றது.

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் வன்னிப் பெருநிலப்பரப்பில் குறிப்பாக முள்ளிவாய்க்காலில் செய்த அளப்பெரிய தியாகங்களுக்கான பிரதிபலன்கள் வரப்போகின்ற எமது எதிர்கால சந்ததியினருக்கு பூரணமாகக் கிடைக்க வேண்டும்.

இந்தத் தியாகங்கள் வீண்போகாமல் நீதியோடும் நியாயத்தோடும் சம உரிமைகளோடு எங்களுடைய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்றைப் பெற்றுவாழ்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயற்படும்' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சென்னையை சுருட்டியது டெல்லி

டெல்லி,மே 19

சென்னை அணிக்கெதிரான போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

டெல்லியில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணித்தலைவர் டோனி களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனையடுத்து டெல்லி டேர்டெவில்ஸ் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. அவ்வணி சார்பில் சா, மற்றும் அணித்தலைவர் ஸ்ரேயாஸ் அய்யர் களமிறங்கினர். இருவருமே சிறந்த அடித்தளத்தை இடத்தவறியதனால் அடுத்துவந்த வீரர்களும் பெரிதாக சோபிக்கவில்லை. இதனால் அவ்வணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணிசார்பில் ரிஷப்பண்ட் 38, விஜய்சங்கர், பட்டேல் இருவரும் ஆட்டமிழக்காமல் தலா 36 ஓட்டங்களைப் பெற்றனர்.


பந்துவீச்சில் நிகிடி 2, சாகர், ஜடேஜா, தாகூர் மூவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

தொடர்ந்து 163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் சென்னை அணியின் வட்சன், ராயுடு களமிறங்கினர். வட்சன் நிதானத்தை கடைப்பிடிக்க ராயுடுவின் ஆட்டத்தில் அனல் பறந்தது. அவர் சிக்ஸர்களாகவும், பவுண்டரிகளாகவும் வெளுத்து வாங்கினார். மறுமுனையில் வட்சன் 23 பந்துகளில் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் ராயுடுவுடன் இணைந்தார் ரெய்னா. எனினும் சிறப்பாக விளையாடிய ராயுடு 29 பந்துகளில் 4 சிக்ஸர், 4பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் ரெய்னாவுடன் டோனி இணைந்தார். ஆனால் 18 பந்துகளில் 15 ஓட்டங்களை பெற்றிருந்த ரெய்னாவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. அடுத்துவந்த பில்லிங்ஸ் ஒரு ஓட்டத்துடன் நடையை கட்டினார். பின்னர் ஜடேஜா வந்தார். ஆனால் 23 பந்துகளில் 17 ட்டங்களைப் பெற்றிருந்த டோனி ஆட்டமிழந்தார்.

இறுதி ஓவரில் வெற்றிபெற 36 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அந்த ஓவரில் ஒரு ஓட்டத்துடன் பிராவோவை பெவிலியன் அனுப்பினார் போல்ட். நிறைவில் சென்னை அணி 128 ஓட்டங்களைப்பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. ஜடேஜா ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் போல்ட், மிஸ்ரா தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




# மென்பானங்கள் வழங்கிய இராணுவத்தினர்



புதுக்குடியிருப்பு,மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றுவிட்டுத் திரும்பிய மக்களுக்கு இராணுவத்தினர் மென்பானங்களை வழங்கினர்.

புதுக்குடியிருப்பு- மந்துவில் பகுதியில் உள்ள இராணுவ முகாமில், வாகனங்களில் வந்தவர்களை மறித்து படையினர் மென்பானங்களை வழங்கினர். அத்துடன், ஒளிப்படங்களும் எடுத்துக் கொண்டனர்.

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு பத்து மாணவர்கள் உயிரிழப்பு

டெக்சாஸ்,மே 19

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் சாண்டா பே என்னும் பகுதியில் உள்ள பாடசாலையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 10 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

டெக்சாஸ் மாகாணத்தில் ஹூஸ்டன் நகருக்கு அருகே உள்ள ஒரு பாடசாலையினுள் திடீரென நுழைந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்த மாணவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தாக்குதலில் பல மாணவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் சந்தேக நபரையும் வளைத்துப் பிடித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் அதே பாடசாலையின் மாணவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எதற்காக இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது என்பது குறித்த தகவல்களை பொலிஸார் வெளியிடவில்லை.

இது தொடர்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப் டுவிட்டரில் கூறுகையில், டெக்சாசில் இருந்து கிடைக்கும் தகவல்கள் வருத்தம் அளிக்கின்றன என பதிவிட்டுள்ளார்.



## இன்று நாளும் கோளும்

19.05.2018 சனிக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 05 ஆம் நாள்

சதுர்த்தி மு.ப. 09.37 வரை | திருவாதிரை மு.ப. 06.03 வரை | குளிகை மு.ப. 06.00-07.30
இராகுகாலம் 09.00- 10.30 | சுபநேரம் காலை 07.30 - 08.30 | எமகண்டம் 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மை | செலவு | இலாபம் | வரவு | போட்டி | ஆர்வம் | பகை | மறதி | பாராட்டு | சினம் | கவனம் | வெற்றி |

# முல்லைத்தீவில் கடையடைப்பு!






முல்லைத்தீவு, மே 19

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றைய தினம் நண்பகல் 1 2 மணி வரை வர்த்தகர்கள் பூரணக் கடையடைப்பை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, தண்ணீரூற்று, ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டி தமது பூரண ஆதரவை வழங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

# சரணடைந்தோர் பட்டியலை கோருகிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, மே 19

போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தவர்களின் பட்டியலையும், அவர்கள் பற்றிய தகவல்களையும் வெளியிடுமாறு, இலங்கை அரசாங்கத்திடம் அனைத்துலக மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட ஒன்பதாவது ஆண்டு நிறைவை முன்விட்டு, அனைத்துலக மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிடுமாறு பாதுகாப்புச் சபைக்கு உத்தரவிடுவதாக, கடந்த 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்திருந்தார். தேசிய பாதுகாப்புச் சபையின் தலைவராக ஜனாதிபதி மைத்திரியே இருக்கிறார். அவரே முப்படைகளினதும் தளபதி ஆவார். இருந்த போதும், அவர் வாக்குறுதி அளித்து 11 மாதங்களாகியும், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்தவர்களின் பட்டியல் இன்னமும் வெளியிடப்படவில்லை." என்றும் அனைத்துலக மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டி உள்ளது. (ஆ)

# விபத்தில் தந்தையும் மகளும் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலை வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், தந்தை மற்றும் மகள் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

தனது மகளை மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்கு அழைத்துச் சென்ற தந்தையும், மாணவியுமே படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# கடற்படை அதிகாரிக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, மே 19

கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கடற்படையின் லெப்டினன்ட் கொமாண்டர் ஒருவருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொலிஸாரின் ஊடாக இந்த உத்தரவை அமுல்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான கடற்படைக் கொமாண்டர் நாட்டிலிருந்து தப்பிச்சென்றிருந்தால், அவருக்கு உதவி புரிந்தவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அவர்களைக் கைது செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வெள்ளை வானைப் பயன்படுத்தி 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு, பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு அமைய, கடற்படையின் முன்னாள் பேச்சாளர் உள்ளிட்ட கடற்படை வீரர்கள் பலர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# படையினரின் தாக்குதலில் இருவர் காயம்

பொகவந்தலாவை, மே 19

விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படும் இருவர், டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை லொயினோன் தோட்டத்தைச் சேர்ந்த இருவரே, இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினரே, பாதையில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என பொகவந்தலாவைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# ஏ-9 வீதியில் விபத்து: பொலிஸார் பலி!

அனுராதபுரம், மே 19

ஏ-9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில், பொலிஸார் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மஞ்சள் கடவையால் பாதையைக் கடக்க முற்பட்ட வேளையில், அந்தப் பகுதியில் வந்த வான் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

திரப்பனே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 45 வயதுடையவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# வலி. மேற்குப் பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், மே 19

வலி.மேற்கு பிரதேச சபையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தவிசாளர் த.நடனேந்திரன், பிரதி தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

வலி.மேற்கு பிரதேச சபையின் மூன்றாவது கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் இரவு 8.45 மணிவரை இடம்பெற்றது.

கூட்டத்தின் நிறைவில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, சபையில் தீபமேற்றி அஞ்சலி செலுத்த அனுமதிக்க வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா கோரிக்கை முன்வைத்தார்.

அவரது கோரிக்கையை தவிசாளரும், உறுப்பினர்களும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து, அனைவரும் கைகளில் மெழுகுவர்த்தி தீபம் ஏற்றி அக வணக்கம் செலுத்தினர்.

## பிணைமுறி விவகாரம்:
# மீள் பரிசீலனை மனுமீது 2 தினங்கள் விசாரணை

கொழும்பு, மே 19

பர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கசுன் பலிசெனை ஆகியோர், தமக்கு பிணை வழங்குமாறு கோரி தக்கல் செய்த மீள் பரிசீலனை மனுவை, இந்த மாதம் 25 ஆம் திகதியும், எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரம் தொடர்பில், குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ஆ)



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மீண்டும் யுத்தத்தை உருவாக்கும்!



கொழும்பு, மே 19

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்பது, நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற பயங்கரவாத யுத்தத்தை மீண்டும் உருவாக்க வழிவகுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

"இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டமை வருந்தத்தக்க விடயம். ஆனால், தற்போதுள்ள தமிழ் அரசியல்வாதிகள் யுத்தத்தைக் காரணம் காட்டி, நாட்டைப் பிளவுப்படுத்த முயற்சிக்கின்றனர். இறந்த உறவினர்களுக்கு அவர்களின் உறவினர்கள் அஞ்சலி செய்வது இயல்பான விடயம். இதனைச் சட்டத்துக்குள் வரையறுக்க முடியாது. ஆனால், நாட்டைப் பிளவுப்படுத்தும் நோக்கில் ஆயுதமேந்திப் போராடிய விடுதலைப் புலிப் போராளிகளை நினைவுபடுத்தும் செயற்பாடு, நாட்டுக்காகப் போராடி உயிர்த் தியாகம் செய்த இராணுவத்தினரை அவமானப்படுத்துவதாக அமையும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த உதவுக!

## இந்தியாவிடம் மைத்திரி வேண்டுகோள்



கொழும்பு, மே 19

இலங்கை தீவு நாடு என்ற வகையில் சட்டவிரோதப் போதைப்பொருள் கடத்தலால், நாட்டுக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய இராணுவத்தின் உதவியை எதிர்பார்க்கின்றோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்திய இராணுவ பணிக்குழாம் பிரதானி ஜெனரல் பீபின் ராவட், நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் வைத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார். இதன்போதே ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சகோதர அயல்நாடுகள் என்ற வகையில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் நட்புறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இந்த உறவை மேலும் பலப்படுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனக் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான புலனாய்வுத் தகவல் பிரிவுகளைப் பலப்படுத்துதல், தேசிய மற்றும் பிராந்தியப் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமானது எனக் குறிப்பிட்ட இந்திய இராணுவத்தின் பணிக்குழாம் பிரதானி, இதற்கு இலங்கை அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவைப் பயிற்றுவித்தல் மற்றும் இரு நாடுகளுக்கிடையில் நவீன தொழில்நுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (ஆ)

# வெங்காயக் கொள்வனவுக்கு ரூ. 47.3 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, மே 19

பெரிய வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் விவசாயிகளுக்குப் பல நிவாரண உதவிகளை விவசாய அமைச்சு வழங்க உள்ளது. இதன் அடிப்படையில் இந்த முறை சிறுபோகத்தின் போது, விதை வெங்காயத்தைக் கொள்வனவு செய்வதற்கு 47.3 மில்லியன் ரூபா நிதியை விவசாய அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன்மூலம் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ஒன்பதாயிரம் ரூபா தொடக்கம் 40 ஆயிரம் ரூபா வரை பெறுமதி கொண்ட நிவாரண உதவிகள் வழங்கப்பட உள்ளன.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர விவசாயத் திணைக்கள அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது உள்ளூர் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காய உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை அடுத்தே, பெரிய வெங்காயம் ஒரு கிலோவுக்கு 80 ரூபா உறுதி செய்யப்பட்ட விலையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தேவையான விதை மற்றும் ஆலோசனைகளை வழங்குமாறு தம்புள்ள, கலேவல, பல்லேபொல மகுல்கஸவாவ, வாசல கோட்ட நாவுல, லக்கல ஆகிய இடங்களிலுள்ள விவசாய அலுவலகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# அமெரிக்காவால் இலங்கைக்குப் பாதிப்பு

## ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மே 19

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி, இலங்கை மற்றும் ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியால், டொலரின் பெறுமதி உயர்ந்துள்ளது. இதன் தாக்கத்தால் இலங்கை, ஆர்ஜென்ரீனா உள்ளிட்ட நாடுகளின் நாணயங்களின் பெறுமதி குறைந்துள்ளது." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# விலகும் நாளைத் தீர்மானிக்க ஜனாதிபதி காலக்கெடு!





கொழும்பு, மே 19

அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கான நாளொன்றைக் குறித்துக் கொள்ளுமாறு, தேசிய அரசாங்கத்தில் நிலைத்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 23 உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திர ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி புதிய நிர்வாக சபை ஒன்று நியமிக்கப்பட உள்ளது ." என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

# நாங்கள் எப்பவும் மனுசத்தன்மையோடை நடப்பம் என்ன?

என்ன சொன்னாலும் அந்தக் காட்சியளைக் கண்கொண்டு பாக்கேலாமைப் போச்சுது. வந்த சனம் அழுத அழுகையை என்னெண்டு சொல்லுறது? சனம் ஒண்டுக்கும் பயப்பிடேல்லை. வாறது வரட்டும் எண்டதுதான் சனத்தின்ரை எண்ணம். முதலமைச்சர் சுடரைக் கொளுத்தி ஒரு சாதாரண பெண்ணிட்டைக் குடுத்து "நான் சுடரை ஒரு பொழுதும் ஏத்தப் போறதில்லை" எண்டு முன்னம் சொன்ன சொல்லைக் காப்பாற்றிப் போட்டார். இது அவர் ஒரு நீதிமான் எண்டதை மட்டுமில்லை அவரிலை சனம் வைச்சிருக்கிற மரியாதையையும் கூட்டிப்போட்டுது.

திருநெல்வேலி யூனிவசிட்டியிலை இருந்து துவங்கி வலு மரியாதையா ஒரு பிசகும் இல்லாமல் பெடியள் முள்ளிவாய்க்காலுக்குப் போனதாக் கேள்வி. ஆனால் இடையிலை மறிச்சு அவைக்கு யூஸ் கரைச்சுக் குடுக்க வெளிக்கிட்டவையாம் ஆமிக்காரர். யூஸ் கிளாஸ் தட்டோடை பெடியளை மறிச்சாலும் அவங்கள் வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டுத் தங்கடை பாட்டிலை போயிருக்கிறாங்கள். என்ன நோக்கத்தோடை குடுத்தவங்கள் எண்டு விளங்கேல்லை. மன்னார் பாதருக்கும் போற வழியிலை மறிச்சுச் சாப்பாடு குடுத்தாப் போலை தான் அவருக்கும் பிசகு நடந்ததெண்டும் முன்னம் கதைச்சவை. அப்பிடி ஏதாவது பின்னோக்கம் இருக்கலாம் எண்டும் கதைச்சவை. என்னெண்டாலும் அவை நல்ல நோக்கத்தோடைதான் குடுத்தவை எண்டும் எடுப்பம். என்ன?

இதுக்கை ஜனாதிபதி தன்ரை இணையத்திலை போட்டது பிரச்சினையாப் போச்சாம். "யுத்த வீரர்களுக்கு நான் தலை வணங்கிறேன்" எண்டு போட்டிட்டார். பிறகு சனம் அதைப் பற்றிக் குறைவாக் கதைச்ச உடனை எடுத்துப் போட்டாராம். அவரும் எப்பவும் இரு தலைக் கொள்ளி எறும்புதான். பாவம்.

இதுக்கை ஒரு சிங்கள அமைச்சர் வலு நிதானமாவும் ஞாயமாவும் பேசி இருக்கிறார். அவற்றை பேரைக் கேள்விப்பட்டியளோ தெரியாது, அவற்றை பேர் அமைச்சர் வஜிர அபேவர்த்தன. "இறந்த ஆக்களின்ரை நினைவாச் செய்யிற எதையும் ஆரும் தடுக்கேலாது. போரிலை இறந்த ஒரு ஆமிக்காரனை நினைச்சு ஒரு பிரார்த்தனை நடத்தேலுமெண்டால், வடக்குக் கிழக்கிலை உள்ள மக்களும் போரிலை முள்ளிவாய்க்காலிலை செத்துப்போன உறவுகளையும் சிநேகிதங்களையும் நினைச்சு ஒரு துளி கண்ணீர் விட அவைக்கும் உரிமை இருக்கு. இப்ப பாருங்கோவன், 1971ஆம் ஆண்டு புரட்சியிலை செத்துப்போனவையளை நினைச்சு வருசா வருசம் கொழும்பு விஹாரமாதேவி பூங்காவிலை பிரார்த்தனை நடத்தினம். அதைப்போலை 88 – 89 ஆம் ஆண்டளவிலை செத்துப்போனவையளையும் "தேசப்பற்றாளர்கள்" எண்டு சொல்லி அரசியல் கட்சிகள் அவையளையும் நினைவுபடுத்தினம். அப்ப அவையள் தேசப்பற்றாளர்கள் எண்டால் புலியளும் இனப் பற்றாளர்கள்தான். அவையளின்ரை பிரச்சினையளையும் புரிஞ்சு கொண்டு அவைக்கும் சமமான சுதந்திரத்தைக் குடுக்க வேணும்" எண்டமாதிரிச் சொல்லி இருக்கிறார்.

ஞாயத்தை விளங்காத மனுசர் இருந்தென்ன? செத்தென்ன? வடக்குக் கிழக்கிலை துக்கமா நேற்றைய தினத்தைத் தமிழ் சனம் கொண்டாடப் பொறுக்கேலாத சில சிங்களப் பொறிக்கியள் கிரிபத்கொடை எண்ட இடத்திலை ஆமியின்ரை வெற்றியைக் கொண்டாடுகிறம் எண்டு சொல்லிப் பால்சோறும் குடுத்து, புலியளின்ரை கொடியை எரிச்சுக் காலிலை போட்டு மிதிச்சு வெறியாட்டம் ஆடியிருக்கினம். வழமையாக் கிரிபத்கொடை எண்ட இடம் துவேஷமான இடம்தான். அங்கை சிங்களவருக்குத்தான் வீடு வாசல் வாங்கலாம். முஸ்லிம் ஆக்களோ தமிழ் சனமோ ஒண்டும் வாங்கேலாது. அப்பிடி இருக்கேக்கை அங்கை இப்பிடி ஒரு துவேஷமான விசியம் நடக்கிறதைப் பற்றிக் கவலைப் படப்பிடாது.

எந்த இடத்திலையும் எல்லாருக்கையும் இது மாதிரிக் களிசறையள் இருக்கிறது வழமைதானே? இதைப்போல ஆக்களுக்கு நல்லிணக்கம் எண்டால் என்னெண்டு தெரியுமோ? இன ஒற்றுமை எண்டால் எனனெண்டு தெரியுமோ? தேசிய ஒருமைப்பாடு எண்டால் என்னெண்டு தெரியுமோ? இந்த விசியத்தைப் பற்றின படங்களை கான்போனிலை காட்டினான் முதலி. அதிலை நிக்கிறதெல்லாத்தையும் பாத்தால் கிரிபத்கொடையிலை குடு விக்கிற சேரிக்காரர் மாதிரிக் கிடக்கு. சரியான ஊத்தையள்.

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## தமிழர்களுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு எந்த விதமான நீதியையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலும், தொடர்ந்து நீதிக்காகவும், தமது அடிப்படை உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் வீதிகளில் நின்று எமது மக்கள் போராடி வருகின்ற நிலையிலும், பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பின் கீழ் வடக்கு கிழக்கில் பௌத்த மயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இன்று நாம் 9 ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நாளை கனத்த இதயங்களுடன் நினைவு கூருகின்றோம்.

மனித நாகரிக வளர்ச்சியின் உச்சத்தில் உலகம் இருக்கும் இன்றைய 21ம் நூற்றாண்டில் மனித குலத்துக்கு எதிரான படுகொலைகள், சுத்திகரிப்புக்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தடுக்கும் நோக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது.

அச்சபை நிறுவப்பட்டு 3 வருட காலங்களுக்குள்ளாகவே எமது மக்கள் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். சாட்சிகள் இல்லாப் போரினை நிகழ்த்தி எமது அப்பாவி மக்கள் பலர் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தப் போருக்கு ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதநேயப் பணியாளர்கள் எவருமே உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

சாட்சியங்கள் இல்லாத நிலையில் அல்லது சாட்சியங்களை உள்விடாத நிலையில் இலங்கை அரசாங்கத்தின் பொய்யான பரப்புரைகள் மூலம் அனைத்துலக சமூகம் இலங்கை அரசினால் தவறாக வழிநடத்தப்பட்டது.

இவ்வாறான பொய்யும் புரட்டுமே இங்கு நடந்த அழிப்பை அனைத்துலக சமூகம் தடுக்க முடியாமல் போனமைக்கு ஒரு காரணம்.

ருவாண்டா, பொஸ்னியா போன்ற நாடுகளை உதாரணம் காட்டி எமக்கான நீதி செயற்பாடுகள் பல தசாப்தங்கள் செல்லலாம் என்று மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி அரைகுறை தீர்வை திணிக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் ருவாண்டா, பொஸ்னியா ஆகிய நாடுகளில் இனப்படுகொலை இடம்பெற்ற காலமும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்ற காலமும் வேறுபட்டவை.

முன்னைய படுகொலைகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்ட அனைத்துலக சமூகம் இப்படியான கொடூரங்கள் இனிமேலும் எந்த நாட்டிலும் இடம்பெறக்கூடாது என்ற நோக்கில் பல்வேறு மனித உரிமைகள் பொறிமுறைகளை ஏற்படுத்திய பின்னரே முள்ளிவாய்க்கால் படுகொலை இடம்பெற்றது.

ஆகவே சட்டங்கள் ஓரளவு வலுவாக இருந்த போதே இந்தப் பேரவலம் நடந்தேறியது.

இறைமையுள்ள ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்படும்போது அவற்றைத் தடுத்து நிறுத்துவது இன்றுள்ள அனைத்துலக சட்ட இணக்கங்களின் பிரகாரம் நியாயபூர்வமானது. காலம் பிந்திய நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனாகும்.

இன்று இந்த நாட்டில் கொலைக் குற்றம் புரிந்தவர்கள் கூட குற்றவாளிகளாகப் பார்க்கப்படுவதில்லை. அவர்களின் இனத்தைப் பொறுத்து வீரர்களாக்கப்படுகின்றார்கள்.

"எமது சிங்கள போர்வீரர் ஒருவரையேனும் சிறை செல்ல விடமாட்டேன்" என்று சமுதாயத்தின் உயரிய மட்டத்தில் இருப்போர் கூறும் போது ஒருவரின் குற்றம் அவரின் இனத்தைப் பொறுத்துத்தான் தீர்மானிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுகின்றது.

அனைத்துலகத்துக்கு முன்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலப்பு விசாரணைப் பொறிமுறையை இலங்கை அரசானது இன்று மறுதலித்து நிற்கும் நிலையில் கடந்த 70 வருடங்களில் எவ்வாறு தமிழ் மக்களை தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் ஏமாற்றி இருப்பார்கள் என்பதை அனைத்துலக சமூகம் இனிமேலாவது உணர்ந்துகொள்ள வேண்டும்.

இன்னமும் மகாவம்ச சிந்தனையில் திளைத்திருக்கும் சிங்கள அரசியல்வாதிகள் முள்ளிவாய்க்கால் அழிப்பை தமிழ் - சிங்களப் போராகவே கருதி, தம் இனத்தின் வெற்றி என்ற மனோபாவத்தில்தான் இருந்து வருகின்றார்கள்.

ஒரு சிங்களப் போர் வீரன் தமிழ் மக்களுக்கு எதிராக எந்தக் குற்றத்தைப் புரிந்திருந்தாலும் அது குற்றமே அல்ல என்று வாதாடும் சிங்கள அரசியல் தலைமைகளே இன்று இந்த நாட்டில் காணப்படுகின்றார்கள்.

ஆகவே தொடர்ந்தும் கால நீடிப்புக்களை இலங்கை அரசாங்கத்துக்கு அனைத்துலக சமூகம் வழங்கக் கூடாது.

கடந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் ஆணையாளரால் கூறப்பட்டதை நினைவுபடுத்தி "இலங்கையில் பொறுப்புக் கூறலை ஏற்படுத்த உதவும் வகையில் உலகளாவிய விசாரணை அதிகாரத்தை பிரயோகிப்பது உட்பட ஏனைய வழிவகைகளையும் உறுப்பு நாடுகள் ஆராய வேண்டும்" என்று இந்த சந்தர்ப்பத்தில் அவருடன் சேர்ந்து அனைத்துலக சமூகத்தை இத்தால் வேண்டி நிற்கின்றேன்.

எந்தவொரு நாடும் தனது குடிமக்களை வீதிக்கு விரட்டி அவர்களின் வாழ்விடங்களை அடாத்தாக பிடித்து வைத்திருப்பதில்லை.

துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் வடக்கு கிழக்கில் அது தான் நடைபெறுகின்றது. எம்மக்கள் இன்று வீதிகளில் இறங்கி வருடக்கணக்கில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் வருடக்கணக்கில் எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றி தொடர்ந்து தடுப்பு முகாம்களில் வாடி வதங்கி வாழ்ந்து வருகின்றார்கள். "கைவாங்குவோம்" என்ற தடைச் சட்டம் கால தாமதமாகியும் கைவாங்கப்படவில்லை.

வன்னி நிலப்பரப்பு அதிதீவிர சிங்கள மயமாக்கலுக்கு உட்பட்டுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட சில இடங்களை விடுவிக்கும் நடவடிக்கைகளுக்குக் கூட மீள்குடியேற்றத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இராணுவத்துக்குப் பெரும் தொகை நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதன் தாற்பரியம் எமக்கு விளங்கவில்லை.

மீள் குடியேற்றத்துக்கு அனைத்துலகத்தினராலும் அரசாங்கத்தினராலும் ஒதுக்கப்பட்ட நிதிகளை எவ்வாறு படைகள் எடுத்துச் செல்ல முடியும்?

எமது மக்களின் அழைப்பின் பேரில் படைகள் இங்கு வரவில்லை. முகாமிட்டிருக்கவில்லை. போர் முடிந்ததும் உடனே வெளியேற வேண்டிய அவர்கள் எமது காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருந்தார்கள். வளங்களை அவர்கள் சுவீகரித்து வந்தார்கள்.

இப்பொழுது அவர்கள் எம் மண்ணை விட்டு வெளியே செல்ல எமக்கென ஒதுக்கப்பட்ட பணம் அவர்களுக்குக் கையளிக்கப்படுகின்றது. படைகளுக்குக் கொடுத்த பணம் எமது மக்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி என்பதை அரசாங்கம் மறந்து விட்டது.

ஒருவேளை அனைத்துலக நெருக்குதலுக்கு ஆளாகியிருக்கின்ற அரசாங்கத்தின் கோரிக்கைக்கு செவி சாய்க்க படையினர் மறுத்ததால்தான் அவர்களுக்கு எங்கள் பணத்தை இலஞ்சமாகக் கொடுத்து வெளியேற்றுகின்றார்களோ என்று நாம் எண்ண வேண்டியிருக்கின்றது.

இதுவே இன்றைய வடக்கு - கிழக்கின் யதார்த்த நிலையாகும்.

இலங்கையின் கடந்த 70 வருட காலவரலாற்றைப் பார்க்கும் எவருக்குமே அனைத்துலக தலையீடுகள் இல்லாமல், நெருக்குதல்கள் இல்லாமல் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் போவது என்பது இயலாத காரியம் என்பது புலப்படும்.

அனைத்துலக அரங்கில் நெருக்குதல்களை உலக நாடுகள் எமது நாட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்று பகிரங்கமாகவே இந்தத் தினத்தில் உலக நாடுகளை நோக்கி அறை கூவல் விடுகின்றேன்.

போர் முடிந்த பின் சமாதான காலத்தில் ஒரு இனத்தைத் தொடர்ந்து தமது ஆதிக்கத்தினுள் கட்டுப்பட வைத்து எமது தொடர் அரசாங்கங்கள் செயலாற்றி வருவதை உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனது அருமை மக்களே!

நாம் தொடர்ந்தும் எடுத்தார் கைப்பிள்ளையாகச் செயற்படாமல் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாட்டினூடாக இனஅழிப்புக்கான நீதிவேண்டியும் எமக்கான அரசியல் அபிலாசைகளை அடையும் முயற்சிகளை முன்னெடுத்தும் ஒன்றிணைந்து கொண்டு செல்ல அணிதிரளுமாறு இன்றைய நாளில் உங்களை அழைக்கின்றேன்.

21ஆம் நூற்றாண்டின் நவநாகரிக மானிட யுகத்தில் இனஅழிப்புக்குட்படுத்தப்பட்ட இனம் எமது இனம் என்பதை நாம் மனதில் நிறுத்துவோமாக" என தெரிவித்தார்.

## முன்னாள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வெளியாகியுள்ளது.

மன்னார் உயிலங்குளம் புதுக்குடியிருப்பு கிராமத்தில் நேற்றுமுன்னினம் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் வெள்ளை நிற காரில் சிவில் உடையில் 8 பேர் கொண்ட குழுவினர் அங்கு சென்று முன்னாள் போராளி ஒருவரை கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர். பகுதிக்கு சென்ற குழுவினர் முதலில் முன்னாள் போராளியான விவசாயியின் வாகன சாரதியை பிடித்து அவருடன் போராளியின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

பின்னர் குறித்த முன்னாள் போராளியை பிடித்துக் கொண்டு செல்ல முற்பட்ட போது துப்பாக்கியுடன் வந்த குழுவினருக்கும், முன்னாள் போராளி மற்றும் அவர்களின் உறவினர்களுக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டதனைத்தொடர்ந்து துப்பாக்கியுடன் வந்த குறித்த குழுவினர் சரமாரியாக 4 தடவைகள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த குழுவினருக்கு முன்னாள் போராளி உள்ளிட்ட உறவினர்கள் கடுமையாக தாக்கியுள்ளதோடு, கைவிலங்கிடப்பட்டு வாகனத்தில் பதுக்கி வைத்திருந்த வாகன சாரதியையும் மீட்டுள்ளனர். இந்த நிலையில் குறித்த குழுவினர் தமது காரில் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன் போது குறித்த சாரதியின் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், 50 ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை அவருடைய மேல் ஆடையுடன் கொண்டு சென்றுள்ளனர். சம்பவ இடத்தில் வெற்று ரவைகள் 4, வெடிக்காத ரவைகள் 2, கைவிலங்கு ஆகியவை காணப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு தகவல் வழங்கியதோடு, பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் மன்னார் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இதன் போது குறித்த காரில் துப்பாக்கியுடன் சிவில் உடையில் வந்தவர்கள் தாங்கள் பொலிஸார் என தெரிவித்ததாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

விசாரனைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்து அங்கு காணப்பட்ட தடயப்பொருட்களான வெற்று ரவைகள் 4, வெடிக்காத ரவைகள் 2, கைவிலங்கு ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். எனினும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் குறித்த சம்பவம் இடம் பெற்ற இடத்தில் இரத்தக்கறைகளுடன் ஆடை ஒன்று கிடந்ததாகவும், துப்பாக்கியுடன் சிவில் உடையில் வந்தவர்கள் காயமடைந்திருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அரச புலனாய்வுத்துறையினர் என சந்தேகிப்பதாகவும், பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

## கண்ணீரில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 11 மணியளவில் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட மக்களுக்கான பிரதான நினைவுச் சுடரை, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்துக் கொடுக்க, 2009 ஆம் ஆண்டு 15 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் தனது பெற்றோர் மற்றும் உறவினர்களை இழந்து தானும் காயமடைந்த யுவதியான கேசவன் விஜிதா என்பவர் பொதுச் சுடரை ஏற்றினார்.

இதையடுத்து. முள்ளிவாய்க்கால் நினைவிட வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த சுடர்களை, உறவுகளை இழந்தவர்கள் ஏற்றினர்.

உறவுகளை இழந்தவர்கள், கண்ணீர் விட்டும், கதறியும், முள்ளிவாய்க்கால் மண்ணில் அழுது புரண்டு தமது ஆற்ற முடியாத் துயரை வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நினைவுரையாற்றினார்.

அதையடுத்து, நிகழ்வு நிறைவடைந்தது. இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள் கூடியிருந்தனர்.

யாழ்.பல்கலைகழக மாணவர்கள் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்கமைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது பொதுச் சுடரேற்றும் பகுதிக்குள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விகினேஸ்வரனை தவிர வேறு எந்த அரசியல்வாதிகளும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. மாவை சேனாதிராஜா சாள்ஸ் நிர்மலநாதன், சிவமோகன், சிறிதரன் சாந்திசிறிஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண அமைச்சர்கள் உறுப்பினர்கள் யாழ் மாநாகர சபை உறுப்பினர்கள் என அனைவரையும் மாணவர்கள் உட்செல்ல விடாது தடுத்துவிட்டனர்.

## கொழும்பில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரிபத்கொட பகுதியை சேர்ந்த இளைஞர்கள் சிலர் யுத்த வெற்றியை கொண்டாடும் முகமாக நேற்று இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகளை ஏந்தியவாறு அனைவருக்கும் பாற்சோறு வழங்கி, யுத்த வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் கொடிகளை குறித்த இளைஞர்கள் வீதியில் போட்டு காலால் மிதித்து, தீயிட்டு எரித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போராடிவருவோர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூவருக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்த்தர்க்கத்தால் கொலை செய்யப்பட்ட நபர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக குற்றஞ்சாட்டியே வழக்கை சட்ட மா அதிபர் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, விகும் கலுஆராய்ச்சி நேற்று இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் மரண தண்டனையை விதித்து தீர்ப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலனாய்வாளர்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இவர்கள் அங்கு இடம்பெற்ற அனைத்து நடவடிக்கைகளையும் வீடியோ பதிவு செய்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்காக முள்ளிவாய்க்கால் சென்ற மக்களுக்கு முள்ளிவாய்க்காலிலும் அதே போன்று பல இடங்களிலும் தாக சாந்திகள் வழங்கப்பட்டதுடன் இறுதிப் பேரவலத்தை நினைவுகூரும் வகையில் கஞ்சிகளும் பல இடங்களிலும் வழங்கப்பட்டிருந்தது.

## வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு இருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

அத்துடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும், நேற்று நண்பகல் வரை கடைகள் திறக்கப்படவில்லை. துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

## முகாமைத்துவ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் இன்று நடத்தப்படவுள்ள முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான கடமைக்கு உத்தியோகத்தர்கள் பயணித்த போதே விபத்து இடம்பெற்றது.

அதில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் வேலணையைச் சொந்த இடமாகவும் யாழ்ப்பாணம், ஆத்திசூடி வீதியில் வசிப்பவருமான கோபாலபிள்ளை குகன் (வயது 35) என்ற முகாமைத்துவ உதவியாளரே உயிரிழந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 18.05.2009 நடிகைக்கு மிரட்டல்!



சென்னை, மே 19

ஈழப்போரின் போது தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள திரைப்படம் 18.05.2009 ஆகும். இதில், நடித்துள்ள நடிகை தன்யாவுக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப்படம் ஈழப் போரின் கடைசி நாளான மே- 18 இல் சிங்கள இராணுவத்தால் ஈழத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன்முறையைப் பற்றி பேசுகிறது.


இதில், சுபாஷ் சந்திர போஸ், பிரபாகரன். நாகிநீடு, தான்யா, ஜேக்கப், ஸ்ரீராம், பாலாஜி மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள். இசைஞானி இளையராஜா இந்தப் படத்துக்கு இசையமைத்திருக்கிறார்.

இந்தத் திரைப்படம் நேற்று வெளியாகியது. இந்த நிலையில், இந்த படத்தில் நடித்துள்ள நடிகை தன்யா போர்க்களக் காட்சியில் நிர்வாணமாக நடித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவருக்கு தொலைபேசி வாயிலாக பேசிய மர்ம நபர் ஒருவர் கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என நடிகை தன்யா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

(ஆ)

# கல்யாண வயசு வந்திடுச்சிடி

## நயனுக்கு விக்னேஷ் தூது



சென்னை, மே 19

இயக்குநர் விக்னேஷ் சிவன், தன்னுடைய திருமண ஆசையை வெளிப்படையாகச் சொல்லி நயன்தாராவின் முடிவுக்காக காத்திருக்கிறாராம். நயன்தாராவும் இயக்குனர் விக்னேஷ் சிவனும் காதலித்து வருகின்றனர். 'நானும் ரவுடிதான்' படப்பிடிப்பில் இருவருக்கும் காதல் மலர்ந்தது. அந்தப் படத்தை விக்னேஷ் சிவன் இயக்கி இருந்தார். இருவரும் ஜோடியாகப் பல நாடுகளைச் சுற்றி வருகிறார்கள். சென்னையில் ஒரே வீட்டில் தங்குவதாகவும் கிசுகிசுக்கள் வந்தன.

இரகசியத் திருமணம் செய்துகொண்டதாகவும் தகவல் பரவியது. ஆனால், இதற்கெல்லாம் பதில் சொல்லாமல் இருவரும் நெருக்கமாகப் பழகி வருகிறார்கள். இருவரும் நெருக்கமாக இருக்கும் படத்தை அடிக்கடி சமூக வலைத்தளங்களிலும் வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நயன்தாராவின் நடிப்பில் உருவாகி வரும் 'கோலமாவு கோகிலா' என்ற படத்தில் 'எனக்குக் கல்யாண வயசு வந்திடுச்சிடி' என்ற பாடல் நேற்றுமுன்தினம் வெளியானது. அனிருத் இசையில், சிவகார்த்திகேயனின் பாடல் வரிகளில் வெளியான இந்தப் பாடல் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப்பெற்று வருகிறது.

இந்தப் பாடல் வரியான 'எனக்கு கல்யாண வயசு வந்திடுச்சிடி' என்பதைப் பதிவு செய்து, 'வெய்ட் பண்ணவா' என்று கேள்வி கேட்டிருக்கிறார் இயக்குநர் விக்னேஷ் சிவன். மேலும் தங்கள் பெயரின் முதல் எழுத்துடன் கூடிய தொப்பியை அணிந்து கொண்டிருக்கும் புகைப்படத்தையும் அவர் ருவிட்டரில் வெளியிட்டுள்ளார். (ஆ)

# மீண்டும் சீறியது கிலுயுயே எரிமலை!

நியூயோர்க் , மே 19

ஹவாய் தீவுகளின் ஹோனோலுலு பகுதியில் உள்ள கிலுயுயே எரிமலை, மீண்டும் வெடித்துச் சிதறியதில், 37 வீடுகள் வரை சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிலுயுயே எரிமலையில் நேற்று முன்தினம் வெடிப்பு ஏற்பட்டது. இதன்காரணமாக நெருப்புடன் கூடிய புகை வெளியேறியது. சுமார் 6 மைல் உயரத்துக்குப் புகை பரவியுள்ளது. மேலும் பல மீற்றர் தூரத்துக்கு எரிமலைக் குழம்பு பரவியது.

எரிமலைக் குழம்புகள் அப்பகுதி முழுவதும் ஆக்கிரமித்த வண்ணம் உள்ளது. இதனால், அந்தப் பகுதியில் வசிக்கும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அரசு அறிவுறுத்தி உள்ளது. மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதியும் இந்த எரிமலை வெடித்து சிதறியமை குறிப்பிடத்தக்கது. (ஆ)




# கொங்கோவில் எபோலா: 23 பேர் உயிரிழப்பு!

கின்சசா, மே 19

கொங்கோ நாட்டில் மீண்டும் எபோலா வைரஸ் பரவத்தொடங்கி உள்ளது. இதனால், கடந்த சில தினங்களில் இந்த வைரஸ் நோய் தாக்கியதில், 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய எபோலா வைரஸ், உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியது.

இந்த நோய் முதலில் 2013ஆம் ஆண்டு, ஆபிரிக்க நாடுகளில் பரவியது. 2016 ஆம் ஆண்டு வரை இந்த வைரஸ் நோய்க்கு 11 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகினர்.

இப்போது மீண்டும் கொங்கோ நாட்டில் இந்த வைரஸ் நோய் பரவத்தொடங்கி உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அங்கு மபண்டாகா நகரில் எபோலா வேகமாகப் பரவி வருகிறது. இந்த வைரஸ் நோய் பரவி வருவதைக் கொங்கோ நாட்டின் சுகாதார அமைச்சர் ஒலி இலுங்கா கலிங்கா உறுதி செய்தார். தற்போது 52 பேரை எபோலா தாக்கி உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையே, அந்த நாட்டுக்கு 4 ஆயிரம் பேருக்குத் தேவையான எபோலா வைரஸ் தடுப்பு மருந்தை உலக சுகாதார நிறுவனம் அனுப்பி வைத்துள்ளது. (ஆ)

# சி.ஐ.ஏ. இயக்குநராக ஜினா நியமனம்



வொஷிங்டன், மே 19

அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. இயக்குநனராக ஜினா ஹேஸ் பெல் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு அமெரிக்கச் செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. இயக்குனராக மைக் பாம்ப்பியோ இருந்து வந்தார். அவரை அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சராக ஜனாதிபதி ட்ரம்ப் சமீபத்தில் நியமித்தார்.

அவருக்குப் பதிலாக சி.ஐ.ஏ. புதிய இயக்குநராக 61 வயதாகும் ஜினா ஹேஸ் பெல் நியமிக்கப்பட்டார். அவரது நியமனத்துக்கு சில செனட் சபை உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த நிலையில், அவரது நியமனத்துக்கு நாடாளுமன்ற செனட் சபை நேற்றுமுன்தினம் ஒப்புதல் கொடுத்துள்ளது. அதற்கான தீர்மானம் அமெரிக்க செனட் சபையில் நிறைவேறியது. ஜினா ஹேஸ்பெல் சி.ஐ.ஏ. இயக்குநராகப் பதவியேற்கும் முதல் பெண் ஆவார். (ஆ)

# கிம் மாறுவதற்கு சீனாவே காரணம்!

## ட்ரம்ப் திட்டவட்டம்

வொஷிங்டன், மே 19

சீன ஜனாதிபதி ஜின்பிங்கை சந்தித்த பிறகே கிம் இப்படி மாறியுள்ளார். சீனா இந்த சிங்கப்பூர் சந்திப்பு நடக்க கூடாது என நினைத்து மனம்மாற்றியிருக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.



வெள்ளை மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.


"பொறுத்திருந்து என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம். அது நடக்கலாம். நடக்காமல் போகலாம். எப்படி இருந்தாலும் அடுத்த கட்டத்துக்கு நாம் நகர வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் - அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆகிய இருவரும், எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்திக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக அமெரிக்கத் தரப்பில் இருந்து சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அணு ஆயுதச் சோதனைக் கூடங்களை தகர்க்க வேண்டும் கைவசம் உள்ள அணு ஆயுதங்களை அழிக்க வேண்டும் போன்ற பல நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

அணு ஆயுதச் சோதனைக் கூடங்களை அழித்து விட்ட வடகொரியா, சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தது. இதற்கிடையே, தென்கொரியாவுடன் சமீபத்தில் நடக்க இருந்த சந்திப்பையும் வடகொரியா இரத்துச் செய்தது. தொடர்ந்து ட்ரம்ப் உடனான சந்திப்பு முடிவில் இருந்து விலகுகின்றோம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனினும், அணு ஆயுதங்களைக் கைவிட்டால் வடகொரியாவை தொடர்ந்தும் கிம் ஆள்வதற்கு ட்ரம்ப் ஒத்துழைப்பார் என அமெரிக்கா தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்கா உள் நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்தி, லிபியாவில் கடாபிக்கு நேர்ந்ததை போல தனக்கும் நேர்ந்து விடுமோ என நினைத்தே, வடகொரிய ஜனாதிபதி கிம் அமெரிக்காவுடன் ஒத்துழைக்காமல் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஆ)

# பிரதமர் ரசாக் இல்லத்தில் பணம், நகை பறிமுதல்



கோலாலம்பூர், மே 19

மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக்கின் வீடு, அலுவலகம் போன்ற இடங்களில், நேற்று நடைபெற்ற சோதனை நடவடிக்கையின்போது பல இலட்சம் மதிப்பிலான பணம், நகைகள் என்பனூ பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பணமோசடி வழக்கில், மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக்கின் வீடு மற்றும் அலுவலகம் என 6 இடங்களில் பொலிஸார் கடந்த 2 நாட்களாகச் சோதனை நடத்தினர்.

இந்தச் சோதனையின் போது சுமார் 284 பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த கைப்பைகளைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர். அவற்றில் பலவற்றில், பல லட்சம் மதிப்பிலான பணமும் வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

நஜீப் ரசாக் நிறுவிய மலேசியா வளர்ச்சி நிறுவனம் மூலம், பல கோடி டொலர்கள் பண மோசடியில், அவர் ஈடுபட்டதாக பல்வேறு நாடுகளில் விசாரணை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# பத்து வீரர்கள் அதிரடியாக நீக்கம்

போர்த்துக்கல்,மே 19

ரஷ்யாவில் நடைபெற இருக்கும் உலகக்கோப்பை கால்பந்து தொடருக்கான போர்த்துக்கல் அணியில் யூரோ சாம்பியன் அணியில் இருந்த 10 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவில் அடுத்த மாதம் 14ஆம் திகதி முதல் ஜூலை 10ஆம் திகதி வரை உலகக்கோப்பை கால்பந்து தொடர் நடைபெறுகிறது. இந்த தொடரில் விளையாடும் 32 நாடுகள், தங்கள் அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இதில் போர்த்துக்கல் அணியும் தங்களுடைய வீரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற யூரோப்பிய சம்பியன் தொடரில் போர்த்துக்கல் அணி சம்பியன் பட்டம் வென்றிருந்தது. அந்த அணியில் இடம்பிடித்திருந்த 10 பேர் உலகக்கோப்பை அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதில் யூரோப்பிய இறுதிப் போட்டியில் கோல் அடித்த ஈடர், முன்னணி வீரர் நானி, அன்ட்ரே கோமஸ், ரெனாடோ சான்செஸ், எலிசேயு ஆகியோர் அடங்குவார்கள்.


போர்த்துக்கல் அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விபரம்:-

கோல் கீப்பர்கள்:- அந்தோணி லோபஸ், பெடோ, ருய் பாட்ரிசியோ பின்கள வீரர்கள்:- புருனோ ஆல்வ்ஸ், செட்ரிச் சோரஸ், ஜோஸ் போன்டே, மரியோ ருய், பெபே, ரபெல் குயேர்ரெய்ரோ, ரிகார்டோ பெரைரா, ரூபென் தியாஸ்.

நடுகள வீரர்கள்:- அன்ட்ரியன் சில்வா, புருனோ பெர்னாண்டஸ், ஜோஓ மரியோ, ஜோஓ மவுட்டினோ, மானுவேல் பெர்னாண்டஸ், வில்லியம் கார்வாலோ.

முன்கள வீரர்கள்:- அன்ட்ரே சில்வா, பெர்னார்டோ சில்வா, கிறிஸ்டியானோ ரொனால்டோ, ஜெல்சன் மார்டின்ஸ், கோன்சாலோ குயேடெஸ், ரிகார்டோ குயேரெஸ்மா.

# டெஸ்ட் அணியில் மக்ஸ்வெல்?



சிட்னி,மே 19

அவுஸ்ரேலிய அணியின்அதிரடி துடுப்பாட்ட வீரர் மக்ஸ்வெல் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு தகுதியானவர் என்று முன்னாள் அணித்தலைவர் அலன் போர்டன் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் மற்றும் ரி20 அணியில் இடம்பிடித்து விளையாடி வரும் மக்ஸ்வெல்லுக்கு டெஸ்ட் போட்டியில் அதிக அளவில் இடம் கிடைத்தது கிடையாது. உள்ளூர் தொடரில் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாததே இதற்கு காரணம் என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை கூறியது.

இந்நிலையில், "மக்ஸ்வெல் சுழற்பந்து வீச்சாளருடன் சிறப்பாக களத்தடுப்பு செய்யக்கூடியவர். இதேபோல் அதிரடியாக விளையாடக் கூடியவர். இதனால் தேர்வாளர்களின் பார்வை அவர் மீது விழுந்திருக்கும்" என்று முன்னாள் அணித்தலைவர் அலன் போர்டர் தெரிவித்துள்ளார்.

தற்போது பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்மித், வோர்னர், பான்கிராப்ட் ஆகியோர் விளையாட தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்ஸ்வெல்லுக்கு டெஸ்ட் அணியில் இடம் கிடைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.



# மீண்டும் மூன்றாவதாக களமிறங்கும் ஜோரூட்

லண்டன்,மே 19

இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் டெஸ்ட் போட்டிகளில் மீண்டும் 3ஆவது இடத்தில் களம் இறங்கி விளையாட உள்ளார்.

தலைசிறந்த துடுப்பாட்டவீரர்களில் ஒருவராக கருதப்படுபவர் ஜோ ரூட். தலைவராக விளையாடுவதால், முக்கியமான 3ஆவது இடத்தில் களம் இறங்குவதை தவிர்த்து 4ஆவது இடத்தில் களம் இறங்கி விளையாடி வந்தார்.

தற்போது தலைமைப் பதவி ஏற்று ஒரு வருடம் ஆகிவிட்டதால் தலைமைப்பொறுப்புக்கான அனுபவம்பெற்றுவிட்டதாக கருதும் ஜோ ரூட், கூடுதல் பொறுப்புடன் 3ஆவது இடத்தில் களம் இறங்கி விளையாட முடிவு செய்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு டெஸ்டில் இங்கிலாந்து விளையாடுகிறது. இங்கிலாந்து அணியில் களம் இறங்கி விளையாடி வந்த வின்ஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இதனால் ஜோ ரூட் 3ஆவது இடத்தில் களம் இறங்குகிறார்.

இதுகுறித்து ஜோ ரூட் கூறுகையில் "3ஆவது இடத்தில் களம் இறங்கும் வாய்ப்பு எனக்கு கொடுக்கப்படுவதால், கொஞ்சம் கூடுதலாக பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது அணித்தலைவர் பதவியை நான் ஏற்று ஒரு வருடம் ஆகிறது. தலைமைப் பதவிக்கான அனுபவத்தை பெற்றுள்ளதாக நினைக்கிறேன்" என்றார்.

# விலகினார் அப்ரிடி



டுபாய்,மே 19

லோர்ட்ஸ் மைதானத்தில் மே 31-ம் திகதி நடைபெற உள்ள மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக விளையாடும் உலக லெவன் அணியில் இருந்து அப்ரிடி விலகியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளை கடந்த வருடம் இரண்டு புயல்கள் சூறையாடின. இதில் கிரிக்கெட் மைதானங்கள் சேதமடைந்தன. இவற்றை புனரமைப்பதுக்காக நிதி திரட்ட லோர்ட்ஸ் மைதானத்தில் வரும் 31ஆம் திகதி காட்சி ரி 20 போட்டி நடத்த முடிவு செய்யப்பட்டது. இதில் மேற்கிந்திய - உலக லெவன் அணிகள் மோதுகின்றன.

உலக லெவன் அணியில் பாகிஸ்தானின் முன்னாள் அதிரடி வீரர் ஷாகித் அப்ரிடி இடம்பிடித்திருந்தார். 38 வயதான அப்ரிடி, முழங்காலில் ஏற்பட்ட காயம் இன்னும் குணமடையவில்லை. அதனால் உலகலெவன் அணியில் பங்கேற்க இயலாது என டுவிட் செய்துள்ளார். இதனால் அப்ரிடி காட்சி போட்டியில் விளையாடவில்லை.

அப்ரிடி தனது டுவிட்டர் பக்கத்தில் "நான் எனது டாக்டரை பார்ப்பதற்காக டுபாய் சென்றுள்ளேன். இன்னும் எனது முழங்கால் காயம் முழுவதுமாக சரியாகவில்லை. எனக்கு இன்னும் 3 முதல் 4 வாரங்கள் தேவை. முழுமையாக குணமடைந்து திரும்புவேன் என்று நம்புகிறேன்" என்றார்.



# பதவிக்காலம் நீடிப்பு

மான்செஸ்டர்,மே 19

மான்செஸ்டர் சிட்டி அணியின் தலைமைப் பயிற்சியாளரான குவார்டியோலாவின் பதவிக்காலம் 2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த குவார்டியோலா 2008ஆம் ஆண்டு முதல் 2012 வரை பார்சிலோனா அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்தார். அதன்பின் 2013 மற்றும் 2016 வரை பேயர்ன் முனிச் அணியின் பயிற்சியாளராக பணிபுரிந்தார்.

2016ஆம் ஆண்டு மான்செஸ்டர் சிட்டி அணியின் பயிற்சியாளராக் நியமிக்கப்பட்டார். 2016-17 சீசனில் மான்செஸ்டர் சிட்டி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. ஆனால், தற்போதைய 2017-18 சீசனில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 19 புள்ளிகள் வித்தியாசத்தில் ப்ரீமியர் லீக் கோப்பையை தட்டிச் சென்றது. ப்ரீமியர் லீக்கில் 106 கோல்கள் அடித்ததுடன், அதிக வெற்றி, சிறந்த கோல் வித்தியாசம் என அசத்தியது.

2016ஆம் ஆண்டு மான்செஸ்டர் சிட்டிக்கு வரும்போது மூன்று வருடம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். அதன்படி அவரது பதவிக்காலம் 2019ஆம் ஆண்டோடு முடிவடைகிறது. தற்போது அவரது செயல்பாட்டில் திருப்தியடைந்துள்ள மான்செஸ்டர், குவார்டியோலா உடனான ஒப்பந்தத்தை 2021 வரை நீட்டித்துள்ளது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 19.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.